# இலங்கை வித்தியா போதினி

CEYLON

JOURNAL OF EDUCATION

*( Tamil Section. )*

தொகுதி : **5** | பெப்ருவரி – **1947** | பகுதி : **2**

## இலக்கியங் கற்பிக்கும் முறை.

இரண்டாம் பிரிவு.

### இலக்கியங் கற்பதன் நோக்கம்.

(முற்றொடர்)

இனி, இலக்கியங் கற்பதன் நோக்கம் யாதென ஆராய்வாம். இலக்கியத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இதை அறிந்து இருத்தல் வேண்டும். நோக்கத்தை அறிந்தாற்றான் அதை நன்கு நிறைவேற்றலாமன்றோ !

**1.** இலக்கியம் இன்பக் கலைகளுட் சிறந்தது.

உலகத்திலுள்ள கலைகளை அறுபத்து நான்கென்றும் 25 அதிலுங் கூடவென்றுங் கூறுகின்றனர். இக்கலைகள் யாவும் மனத்தின் செயல்கள் என அகநூலார் கூறும் அறிதல், உணர்தல், செய்தல் என்பவற்றைப் பற்றிநின்று முறையே அறிவு, இன்பம், ஆற்றல் என்பவற்றைக் கொடுக்குந்தன்மைய வெனினும், கலைகளில் இம்மூன்றில் ஒன்று மற்றவிரண்டிலும் பார்க்கக் கூடவே காணப்படுகிறது. இதனாற் கலைகளை அறிவுக்கலை, இன்பக்கலை, தொழிற்கலை என மூன்றாகப் பிரிக்கலாம். அறிவுக்கலையில் அறிவும், இன்பக்கலையில் இன்பமும். தொழிற்கலையில் ஆற்றலும் தலையிடம் பெற்று விளங்குகின்றன,

25. "ஆயகலைகள் அறுபத்திநான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை."—சகல கலாவல்லிமாலை.

அழகியல் உணர்ச்சியை26 உண்டாக்கி இன்பத்தை ஊட்டுவனவே இன்பக்கலைகளாகும். இவற்றை நுண்கலைகள்27 அல்லது வியன் கலைகள் எனவுங் கூறுவர். இவற்றில் இலக்கியம், இசை, நாடகம், சிற்பம், ஓவியம் முதலியன அடங்கும். இசை கொடுக்கும் ஓசையின் பத்தையும் சிற்பம் ஓவியம் முதலியன தரும் காட்சியின்பத்தையும் இலக்கியம் ஒருங்கே அளிப்பதோடு சிந்தைக்கும் சிறந்த இன்பத்தை அவற்றினும்பார்க்க அதிகமாக அளிக்கிறது. இதனுல் இன்பக்கலை களுட் சிறந்தது இலக்கியமே என அறிஞர் கூறுகின்றனர். "ஓவியம், சிற்பம், இசை முதலியன காலத்தாலும் இடத்தாலும் கட்டுப்படுவன. ஆனுல் இலக்கியமோ இத்தகைய கட்டுப்பாடுகளுக்குட்பட்டதன்று. தன்னுரிமை யுடையது. ஏனைய ஓவியம் சிற்பம் இசை முதலியன காட்சியாலும் கேள்வியாலும் உணரப்படுவன; இந்த இலக்கியமோ கேள்வியின்பத்தால் துய்க்கப்படுவது. அன்றியும் இலக்கிய உட்கருத் தும் அதனை உரைக்கும் சொல்லும், பருந்தும் நிழலும் போல் ஒன்றை விட்டு ஒன்று பிரியாது சேர்ந்து செல்வதால் அவற்றின் பொருளையும் நன்குணர்ந்து, இன்புற்று, இலக்கியத்திற் காணப்படும் பல தொடர்ந்த நிகழ்ச்சிகளையும் மனக்கண்ணுற் காணலாம்" என்ருர் இலக்கியத்தை நுணுகி ஆராய்ந்து பல உண்மைகளை வெளியிட்ட கட்சன் எனும் ஆசிரியர்.28

2. 'கோள்ளையின்பங்' கோடுப்பது.

உலகத்துயிர்களால் விரும்பப்படுவது இன்பமே. மக்களின் உள்ளம் இன்பம் அடைவதற்கு ஏதுவாக உள்ள பொருள்களெல்லாம் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புல வடிவமாக உள்ளன. இவ்வைந்தும் முறையே வாய், கண், மெய், செவி, மூக்கு எனும் ஐம் பொறிகளின் வழியாகக் கொள்ளப்படுவன. இந்த ஐம் பொறி களின் வாயிலாக மனஞ் சென்று அப்புலன்களை நுகர்ந்து இன்புறும்.

" மாசில் வீணையும், மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும்......"29 எனும்

26. அழகியல் உணர்ச்சி—அழகின் இயல்பைப்பற்றிய உணர்ச்சி— (Aesthetic taste)
27. Fine Arts.
28. An Introduction to study of Literature—Hudson.
29. திருநாவுக்கரசு நாயனுர் தேவாரம்.

தேவாரத்தில் ஐம் பொறிகள் வாயிலாக இன்பமளிக்கும் பொருள்கள் ஒருங்கே கூறப்பட்டுள்ள வேறு வேறு காலங்களில் வேறு வேறு பொருள்களால் அனுபவிக்கப்படுவனவாகிய கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐப்புல நுகர்ச்சியையும், ஒரு காலத்தில் ஒருங்கே பெறுதற்கு இடனுகவுள்ளது, காதலின்பம் ஒன்றேயாகும். இக் காதலின்பத்திற்கு எவ்வாற்ருனுங் குறையாத இன்பம் இலக்கியத்தைச் சுவைத்தலால் உண்டாகும் என்பதை மாணிக்க வாசகர் திருக்கோவையார்ச் செய்யுள் ஒன்றினுலே புலப்படுத்துகிறுர்.

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என்சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலில் ஆய்ந்த ஒண்டீந் தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென் கொலாம் புகுந்
தெய்தியதே"30

என்பதே அச் செய்யுள்.

தலைவியோடு கூடி இன்பம் அனுபவித்து விட்டு வந்த தலைமகனை நோக்கி அவனுடைய தோழன் இவ்வாறு வினவுகிறுன். "ஒண்டீந் தமிழின் துறை" என்பது இலக்கியத்தைக் குறிக்கிறது. இலக்கியம் இத்தகைய சிறந்த இன்பத்தின் ஊற்று என்பதற்குப் புலவர்கள் பலருடைய கூற்றுக்கள் சான்று பகருகின்றன.

பொன்னில் ஒளியும், மலரில் மணமும், தேனில் இனிமையும் இயல்பாக அமைந்து விளங்குவதுபோல் செஞ் சொற்கவியில் இன்பம் நிறைந்திருக்கிறதெனக் கம்பர் கூறுகிறுர்.

"பொன்னின் சோதி போதினின் நாற்றம் பொலிவே போற்
தென்னுன் தேனிற் றீஞ்சுவை செஞ் சொற்கவியின்பம்"31

என்பதவர் கூற்று.

இந்தக் கருத்தை இன்னும் வலியுறுத்திக் "கொள்ளையின்பங் குலவு கவிதை" எனப் பாடினுர் பாரதியார். இந்தக் கொள்ளை யின்பத்தை அனுபவித்த புலவர் ஒருவர் வானேரமிழ்தத்தையும் வெறுத்தொதுக்கினுர். தம் காதலே,

30. திருக்கோவையார் செய்யுள் 17.
1. பாலகாண்டம்-மிதிலைக்காட்சிப்படலம்-செய்யுள் 23.

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"32 என்று கூறிப் புலப்படுத்தினர். சங்க இலக்கியங்களுட் சிறந்த தொன்றாகிய கலித் தொகையைப் படித்து உளத்தைப் பறிகொடுத்த புலவர் ஒருவர் வேறொரு நூலும் வேண்டாம் "நனியார்வோம் பொங்கு கவி யின்பம்" என நவின்றார். மில்ரன் எனும் ஆங்கிலப் புலவரும் "பாட் டென்பது மக்கள் மன அறிவினின்றும் வடித்திறக்கப்பட்ட தூய அமிழ்தமாகும்" எனக் கூறுமுகத்தான் பாட்டாற் பெறப்படும் இன் பத்தை நன்கு புலப்படுத்தினர். வான்மீக முனிவருடைய இராமா யாணத்திலுள்ள செய்யுள்களின் இன்பத்தைப் பற்றிக் கூறும்பொழுது கம்பர் அவ்வின்பத்தை மனிதர் மாத்திரமன்றி அமிழ்தத்தை அருந் தும் தேவர்களும் "செவிகளாரப் பருகுகின்றனர்"33 எனப் பாடினர். சேர் பிலிப் சிட்னி எனும் அறிஞரும் "சிறுவர்களை விளையாட்டிலிருந் தும் முதியவர்களைத் தீக்காய்வதிலிருந்தும் நீக்கிக் கவரும் சக்தியு டையது இலக்கியம்" என்றுரைத்தார். தமிழ் இலக்கியம் "ஆயுந் தொறும் தொறும் இன்பந்தரும்" என்று கண்டார் ஒரு புலவர். இலக்கியத்தைப் படிக்கப் படிக்க மேலும் மேலும் இன்பம் பெருகும் என்பதை "நவில் தொறும் நூனயம் போலும் பயில் தொறும் பண் புடையாளர் தொடர்பு"34 எனுங் குறளில் வள்ளுவர் புலப்படுத்தினர். கம்பர் இளங்கோவடிகள் சேக்கிழார் முதலிய புலவர்களோடு கூடி நுகர்தலால் வானவர் நாட்டின்பத்தை அடையலாம் என்பது அறிஞர் பலர் அனுபவாயிலாகக் கண்ட உண்மையாகும்.

"நுண்ணுணர் வினரோடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே ஒக்கும் விழைவிற்றால்"35 என்பதையுங் காண்க

"தவலருந் தொல்கேள்வித் தன்மையுடையார்
இகலிலர் எஃகுடையார் தம் முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி"36 எனும் நாலடியார்ச் செய்யுள்

32. தமிழ் விடுதூது. கண்ணி 151.
33. "தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச் செய்தான்"
34. திருக்குறள் 783.
35. நாலடியார் செய்யுள் 233.
36. நாலடியார் செய்யுள் 137.

புலவர்களோடு கூடிமகிழ்தல் விண்ணுலக இன்பத்தினும் சிறந்ததெனக் கூறுகிறது. புலவர்கள் இயற்றிய நூல்களிலேயே நாம் இன்றும் அவர்களைக் காண்கிறோம். ஆகவே அவர்களுடைய இலக்கியங்களைப் படிப்பதாற்றான் அவர்களோடு சேர்ந்து பழகிப் பேரின்பத்தை யனுபவிக்கலாம்.

" இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம்
எய்தி அரசாண்டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
ஓங்கும் நீழல் இருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத்
திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதையிற் போல்
கற்றோர்க்கிதயம் களியாதே "37 என்பது கம்பனுடைய காவியத்தைச் சுவைத்த அறிஞர் ஒருவருடைய கருத்தாகும்.

3. சுவைத்தல்.

இவ்வாறு காதலின்பம், விண்ணுலக இன்பம் முதலியவற்றினும் பார்க்கச் சிறந்ததென அறிஞர் யாவரும் போற்றும் இலக்கிய இன்பத்தைச் சுவைத்தலே இலக்கியங் கற்பதன் நோக்கமாகும். இந்த இன்பத்தை அனுபவித்தல் அல்லது சுவைத்தல் எவ்வாறு ? "பாட்டு அழகாக இருக்கிறது" என்று வியப்பது சுவைத்தலாகாது. முன் குறிப்பிட்டபடி இலக்கியத்தைச் சுவைத்தற்குக் கற்பனை மிக இன்றியமையாதது. பாட்டின் ஓசை நயம், சொற்கள், கருத்துக்கள் முதலியவற்றில் ஈடுபட்டுக் கற்பனையின் உதவியால் புலனுடைய பாட்டையே நாம் மனத்தில் ஆக்கிக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்தாற்றான் அப்பாட்டைப் பாடும்பொழுது புலவன் கண்ட காட்சிகளை, கொண்ட கருத்துக்களை, அடைந்த உணர்ச்சிகளை, புலப்படுத்திய மெய்ப்பாடுகளை நாமும் பெறலாம். இந்த நிலையை அடையும்பொழுது அப்பாட்டு நம்முடன் கலந்து ஒன்றாகி நம்மைப் பரவசப்படுத்தி இன்பமளிக்கும்.

37. தனிப்பாடல்.

இங்கிலையில் நின்று மாணிக்கவாசக சுவாமிகளுடைய திருவாசகத் தேனையுண்ட இராமலிங்க சுவாமிகள் தாம் பெற்ற இன்பத்தைப் பின் வருஞ் செய்யுளிலே சிறப்பாகப் புலப்படுத்துகிறார் :

" வான் கலந்த மாணிக்கவாசக நின்வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனித்ததுவே "

"தாம் படிக்கும் பாட்டைத் திரும்பப் படைப்பவர்களாக மாண வர்களை ஆக்குதலே உண்மையாகப் பாட்டைச் சுவைக்கச் செய்யும் முறை"38 என சேர் பேர்சி நன் என்னும் அறிஞரும் கூறுநிற்பர். இவ்வாறு ஒரு பாட்டை உள்ளத்திலே திரும்பச் சிருஷ்டிப்பதற்கு புலவனுடைய கருத்துக்கள் முழுவதையும், தொனிப் பொருள்களையுங் கூடப் பாட்டின் சொற்களிலே காணும் ஆற்றல் மிக இன்றியமையாத தாகும் என்பர் கறே எனும் பேராசிரியர்.39 இந்த ஆற்றலைப்பெற்றுச் சிறந்த முறையிலே செய்யுளைச் சுவைத்தற்குப் பல்காற் பயிற்சி வேண் டும். இலக்கியத்தின் உயிர்நிலையை நன்கு அறிந்து அதனைச் சுவைத்து மகிழும் ஆசிரியர்கள்தான் இதனைப் பெற துணைபுரியத் தக்கவர்கள்.

4. பயன்.

இவ்வாறு இலக்கியம் அளிக்கும் இன்பத்தைச் சுவைத்தலால் உள்ளத்தில் என்றும் நீங்காத நிறைவும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. மக்களின் தனித்தன்மை விருத்தியடைகிறது; கற்பனு சக்தி வளம் பெறுகிறது. அழகை அகத்திலும் புறத்திலுங் காணும் ஆற்றல் உண்டாகிறது. அழகே உண்மை; உண்மையே அழகு எனும் பேருண்மை நன்கு புலனுகிறது. நல்லனவற்றையே என்றும் நாடிச் செய்து சான்றோர்களாக வாழ முடிகிறது.

38. "To bad pupils to appreciate is to make them become in a sense its creators"—Sir Peircy Nun—Education "Its Data and first principles."

39. This depends on the ability to discover in the words all that the poet intended or perhaps unknowingly implied-Appreciation of Poetry by Professor P. Gurrey.

உளமானது சான்றோருக்குரிய அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலிய நல்லியல்புகளின் கொள்கலமாக ஆகிறது. சுருங்கக் கூறின் ''பண்புடைமை'' ஏற்படுகிறது. ''நவில்தொறும் நூனயம் போலும் பயில் தொறும் பண்புடையாளர் தொடர்பு''40 எனுங் குறள் இலக்கிய இன்பத்தைப் பண்புடையாளர் தொடர்புக்கு உவமையாகக் கூறுகிறது. பண்புடைமை என்பதற்குப் பரிமேலழகர் ''பெருமை சான்றாண்மைகளிற் றாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறந் தொழுதல்''41 என்றார்.

'' பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்''42 என்பது கலித்தொகை.

'' பண்புடை யார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மண் ''43

'' அரம் போலுங் கூர்மைய ரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பில்லாதவர் ''44

எனுந் திருக் குறள்கள் பண்புடைமையை நன்கு விளக்குகின்றன. ''இலக்கியம் மனத்தைத் விரித்துத் திருத்தித் தூய்மை செய்கிறது; அறிவைக் கூர்மையடையச் செய்து ஞானத்தையும் அளிக்கிறது''45 எனக் காடினல் நியூமன் எனும் அறிஞர் கூறியதையும் நோக்குக.

துன்பத்தினின்று நீங்குதலும் இன்பத்தைப் பெருக்குதலுமே மக்கள் தம் வாழ்விலடைய விரும்புவன. துன்பமில்லாத இன்பமயமான வாழ்வையே தெய்வ வாழ்வு—அமர வாழ்வு எனப் போற்றுகிறோம். இந்த அமர வாழ்வை இவ்வுலகில் வாழ வேண்டின் ''வையத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டும்'' என வள்ளுவர் கூறுகிறார். இவ்வாறு வாழ்வதற்கு இலக்கியப் பயிற்சியால் ஏற்படும் பரந்த அறிவும் பண்புடைமையும் இன்றியமையாதன. இவற்றின் உதவியாற்றான் நன்மை தீமை, இன்பம் துன்பம், செல்வம் வறுமை, வெற்றி தோல்வி, பிறப்பு, வீடு முதலிய இருமைகளின் வகையை நன்கு அறியலாம்.

40. திருக்குறள் 783.
41. ,, 991.
42. கலித்தொகை 133.
43. திருக்குறள் 996.
44. ,, 997.
45. Content of Education: page 101.

வாழ்க்கையிலேற்படும் துயரங்களினால் மனமுடைந்து சோர்ந்து துன் புறாமல் துன்பத்திலும் இன்பத்தைக் காணலாம். இன்பமே என்றும் துன்பமில்லை என வாழலாம்.

ஆகவே வையகத்தில் வானக வாழ்வை அடைவதற்கு இலக்கி யந்தான் உதவி செய்கிறது, வழிகாட்டுகிறது எனலாம். "இலக்கியம் வாழ்க்கையின் விமர்சனமே" என்றும் "வாழ்க்கையை நன்கு நடத்து வதற்கு அது வழிகாட்டுகிறது" என்றும் மதியு ஆர்னல்ட்46 எனும் ஆங்கிலப் புலவருங் கூறியுளர். இதனாலேயே பாடசாலைகளில் கற்பிக்கும் பாடங்களுள் இலக்கியத்திற்குத் தனியிடங் கொடுக்கி றார்கள்.50 இலக்கியத்தைக் கற்காமல் வாழ்பவர்களை விலங்குக ளென்றும், இவர்களால் உலகத்திற்கொரு பயனுமில்லை யென்றும் திரு வள்ளுவர் கூறினார்.

" செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும் "48 எனுங் குறளில் உடலை வளர்த் தற்கு உணவு இன்றியமையாதது போல உளத்தைப் பண்படுத்தி வளம்பெறச் செய்வதற்கு இலக்கியம் இன்றியமையாத தென்பதையும் புலப்படுத்தினார். இலக்கியத்தின் இப்பெரும்பயனை உணர்ந்தே டக்ரர் லிவிஸ் எனும் பேராசிரியர் "தனது சொந்த இலக்கியத்தைப் படிக்காதவன் பிறவற்றை எவ்வளவு கஷ்டப்பட்டுக் கற்றாலும் படித்த வனாகிவிடமுடியாது" என்று கூறியுளர்.

கா. போ. இரத்தினம்.

—தொடரும்

46. Mathew Arnold.

47. "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் அவியினும் வாழினும் என்"

48. திருக்குறள் 412.

49. "If one is uneducated in one's own literature one cannot hope to acquire education in any serious sense by dabbling in or by assiduously frequenting any other." Education and the University by Dr. F. R. Leavis.

50. The Content of Education : page 106.

# எழுத்துத் தமிழுட் சில.

இடையீடின்றி என்றும் விளங்கும் ஒருபாஷையானது மேனிலை யடைவதற்கு எப்போதும் மாறிக்கொண்டே யிருக்கிறது. அது வழங்கி வரும் நாட்டில் காலத்துக்குக் காலம் தோன்றும் புதிய எண்ணங்களுக்கும் இடங் கொடுக்க வேண்டும். அன்றியும் முன்னேற்ற மடைந்த இன்னொரு பாஷையிலுள்ள நுண் கலைச் சொற்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். எனினும், அது தனிமையாக நின்று விளங்கவும், எவ்வகைக் கலைப்பகுதியிலும் அப்போதைக்கப்போது எழும் புதிய எண்ணங்களை இலகுவாக வெளிப்படுத்தவும் முடியும்.

ஒரு பாஷையானது அபிவிருத்தியடைந்து வருவதை உண்மையாகவே விரும்புவர்கள், அதன் அழிவுக்குக் காரணமான பிற பாஷைச் சொற்கள் வந்து புகுவதைப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள். இக்காலத் தமிழ்ப் பாஷையில் கலந்திருக்கும் பிழைகளில் சிலவற்றை இங்கு ஆராய்வாம். பேச்சு வழக்கில் அவை அதிகம் ஏற்பட்டாலும் ஏட்டுவழக்கிலாவது தவிர்க்கப்பட வேண்டும். நாம் சில வெளிப்படையான காரணங்களினிமித்தம் எழுத்தாளர்களின் பெயர் குறிப்பிடவில்லை. அவர்களுடைய நூல்களிற் காணப்படும் வசனங்கள், சொற்கூட்டங்கள் போன்றவற்றை மட்டும் தருகிறோம்.

“ஆனால வ. வே. சு. அப்படி இல்லை.” “இதுவும் கனவு இல்லை. இவ்வாக்கியங்களில் இல்லை என்ற பதம் சரியாக உபயோகிக்கப்பட்டிருக்கின்றதா என்பதை நோக்குவோம். அப்பதம் அது தனி எதிர்மறையைக் குறிப்பதன்றி அவருக்கு அடையாக வந்ததன்று. அது நாம் ஆராய எடுத்துக்கொண்டதற்கு வேறானது. அதனிடத்தில ‘அல்ல’ என்ற பதத்தை நன்றாய் உபயோகிக்கலாம். ஆனால், ‘அல்ல’ என்ற வினை முற்றும் அவ்வாண்பாற் பெயரோடு ஒத்திருக்கவேண்டும். ஆனபடியால் ‘அல்லன்’ என்று எழுதலாம். இன்னும் மரியாதைப்

பன்மை நோக்கி விகுதியை 'அர்' என மாற்றலாம். ஆகவே திருத்த மாக எழுதின், "வ. வே. சு. அப்படி அல்லர்" என்று இருக்கவேண் டும். இரண்டாவது உள்ளவாறு இருக்கலாம் "இதுவும் கனவு அல்ல" என்பதே திருத்தமானது.

"எனக்கு 5 பிள்ளைகள் உண்டு" இது பார்வைக்குப் பிழை போலத் தோன்றவில்லை. "எனக்கு 5 மாடுகள் உண்டு" என்ற வாக் கியத்துடன் ஒப்பிட்டுப்பார்ப்போம். ஐந்து என்னும் எண்ணைக் குறிக்கும் சொல் உயர்திணை அஃறிணை இரண்டற்கும் பொதுவாக நிற்கமாட்டாது. அது அஃறிணைக்கே உரியது. ஆதலின், அது பிள்ளைகள் என்னும் உயர்திணைச் சொல்லிற்கு அடைமொழியாக வர மாட்டாது. "எனக்குப் பிள்ளைகள் ஐவர் உளர்" என மாற்றி எழுதலாம். உண்டு என்னும் வினைமுற்றும் உபயோகிக்கப்படலாம். ஆனல் உளர் என்பது செவிக்குக் கூடிய இன்பம் பயக்கிறது.

"சில பிள்ளைகள் வந்தார்கள்" "பல மனிதர் இருந்தனர்" என்பனபோன்ற வாக்கியங்களிலும் மேற்காட்டிய பிழைகள் இருக் கின்றன. அஃறிணையின்பாற்பட்ட அடைமொழிகளான சில, பல, என்பன, உயர்திணைச் சொற்களான பிள்ளைகள், மனிதர் என்பவற் றிற்கு அடையாக வரமாட்டா. ஆகவே "பிள்ளைகள் சிலர் வந்தார்" "மனிதர் பலர் இருந்தார்" என எழுதலாம். இச் சொற்கள் எழுவாயோடு சேர்ந்திருக்கிறபடியால், எழுவாயை வசனத்தொடக் கத்தில் உபயோகிப்பது பாவனை. அதே முறையை அனுசரித்து அஃறிணைப் பெயர்களையும் பின்வருமாறு எழுதலாம். மாடுகள் பல வந்தன. ஆடுகள் சில வந்தன.

"வீடுகள் தோறும் விளக்கேற்றினர்கள்" இதே போன்ற வேறோர் வாக்கியத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். "பிள்ளைகள் நாள் தோறும் படித்தல் வேண்டும்." இங்கு நாள் என்பது ஒருமை. வீடுகள் என்பது பன்மை இவ்வாக்கியங்களைச் சொல்லொடு பொரு ளாக மொழிபெயர்க்கும்போது-In every houses,and every day என வரும். இப்பொழுது முதல் வாக்கியத்திலுள்ள பிழை தெளிவா கிறது. ஆனபடியால், "வீடு தோறும் விளக்கேற்றினர்கள் என்று

எழுதலாம். நியதியாக, தோறும் என்ற சொல் ஒருமைப் பெயரை யே பற்றி நிற்கும். அடுத்த வாக்கியத்திலுள்ள நாள் என்ற சொல் பன்மையாக இருக்கமாட்டாது."

மேலே காட்டிய இரண்டாவது உதாரணத்தில் படித்தல் வேண்டும் என்று இருக்கிறது ஆனால் படிக்க வேண்டும் என்று கூறுவதுதான் வழக்கமாக இருக்கிறது. அந்த வசனத்தைப் பங்கீகரணம் செய்து பார்த்தால் "படிக்க" என்பது எழுவாயாகிறது. வேண்டும் என்பது பயனிலையாகிறது. ஆனால் எழுவாய் ஒரு வினையாலணையும் பெயரா யிருத்தல் வேண்டும். ஆதலின் படிக்க என்னும் வினை யெச்சத்தை படித்தல் என்னும் வினையாலணையும் பெயராக மாற்றுவோமானால் வசனம் சரியாகிறது. அநேக ஆசிரியர் படிக்க என்பதே சரியான தென ஒத்துக்கொள்கின்றனர்.

இவன் எனது மகன். இங்கு ஆறும் வேற்றுமையுருபு பிழை யாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. இது கந்தனது மாடு. இவ் வசனத்தில் இலக்கணப் பிழையில்லை. ஆனால் உயர்திணைப் பெயரான "மகன்" வரும்போது உடைய என்ற சொல்லுருபு சேர்க்கப்பட வேண்டும். அன்றேல் பழைய முறைப்படி நான்காம் வேற்றுமை யுருபு உபயோகிக்கப்படலாம். ஆகவே இவன் என்னுடைய மகன். இவன் எனக்கு மகன் என எழுதலாம். ஆனால் இவற்றிலும் சிறந் தது 'ellepsis ommission' வேற்றுமையுருபின்றி வருவதுதான் :- இவன் என் மகன். அது என்னும் உருபு அஃறிணைப் பெயருடன் மாத்திரம்தான் வரும் என்பது நூல் மரபு. அவன் அவனுடைய வீட்டில் இருந்தான். அவள் அவளுடைய வேலையைச் செய்தாள். இவ்வகைப் பிழை பெரும்பாலும் ஆங்கில அறிவுள்ளவரிடையே ஏற்படுகிறது. ஏனென்றால் அவர்கள் ஆங்கிலத்தில் யோசித்துத் தமிழில் எழுதுகிறார்கள். பதம் பதமாக மொழிபெயர்த்து அவற்றை வசனமாக அமைப்பதினாலேயே அவ்வாறு நிகழ்கிறது. உதாரணமாக he-அவன், his-அவனுடைய, she-அவள், her-அவளுடைய என்று மொழிபெயர்த்து, தொடர்பைக் கவனிக்காது வசனத்தை அமைக் கிறார்கள். அவனுடைய, அவளுடைய என்ற பதங்களுக்குப் பதிலாக தன்னுடைய என்ற பதத்தை உபயோகித்து அவ்வாக்கியத்தை மாற்றி யமைக்கலாம்.

நான் கேட்க அவன் தான் செய்யமாட்டேன் என்கிறான். இந்த வாக்கியத்தில் மாட்டேன் என்ற பயனிலைக்கு, படர்க்கை ஒருமைப் பெயராகிய அவன் எழுவாயாக வந்திருக்கிறது. பயனிலை தன்மை வினைமுற்றாயிருக்கிறது. ஆகவே வாக்கிய அமைப்பு பிழையாகிறது. அதை இரண்டு விதமாகத் திருத்தலாம். ஒன்றில் வசனத்தின் ஒரு பகுதியைத் தன் வாக்கியமாக மாற்றலாம். அன்றேல் 'மாட்டேன்' வினைமுற்றுக்குப் பதிலாக பாற்சிறப்புக் கருதாது வேறொரு வினை முற்றை உபயோகிக்கலாம். அவையாவன நான் கேட்க அவன் "செய்யமாட்டேன்" என்கிறான். நான் கேட்க அவன்தான் செய்ய முடியாது என்கிறான் என்பனவாம். இரண்டு வசனங்களும் சரி. முதல் வாக்கியத்தில் தான் என்பதையும் வருவிக்க வேண்டுமானால் அதை நான் என மாற்றி அனுதாபக் குறிகளிடையே எழுதல் வேண்டும்.

எதற்காக வந்தாய்? என்னத்திற்காக வந்தாய்? இவற்றில் முந்தியது இந்திய ஆசிரியர்கள் பலராலும், பிந்தியது யாழ்ப்பாண ஆசிரியர்களாலும் உபயோகிக்கப்படுகின்றன. எது, என்ன இரண்டு பதங்களிலும் எது பொருத்தமானது என்பதை மேற்காட்டிய வசனங் களில் ஆராய்வோம். அவற்றை மொழிபெயர்த்தால் எது - which, என்ன - what எனப் பொருள்படும். இப்பொழுது எச் சொல் பொருத்தமானது என்பதைப் பார்ப்போமாயின் பிந்தியதுதான் என்ற முடிவுக்கு வருவோம். எதற்காக என்பது - for which reason, என்னத்திற்காக என்பது - for what reason. ஆகவே முந்தியது பொருத்தமற்றது. மலையாளப் பிரயோகத்தையும் ஒப்பிடுவோம். எந்தினால் வந்து. இது, யாழ்ப்பாண பிரயோகத்திற்கு ஒத்ததாகவே இருக்கிறது. கடவுளே என்னைச் சுத்தமாக்கும் - இதுபோன்ற வாக் கியங்கள் பிபிலிய நூல் தமிழ் மொழி பெயர்ப்பில் காணப்படுகின்றன. இவை பிழையானவை. தன்னைச் சுத்தனாக்கும்படி கடவுளை நோக்கி வேண்டுகிற ஒரு ஆளைச் சுத்தம் என்னும் சொல் விசேடித்து நிற்கிறது. ஆகவே சுத்தம் - one who is purity என்றல்ல, சுத்தன் - one who sipure - என்று இருக்கவேண்டும். பண்புத்தன்மை பருப்பொருளுக்கு அடையாக வரமாட்டாது. கடவுளே என்னைச் சுத்தனாக்கும் என அது மாற்றப்படவேண்டும்.

அவன் தன் அக்கா வீட்டுக்குப் போனான். இங்கு அக்கா என்ற சொல்லிற்குப் பதிலாக தமக்கை என்பது வரவேண்டும். அதுதான் மிகவும் பொருத்தமானது. சகோதர சகோதரிகளுக்கிடையிலுள்ள சகோதரத்துவ இனத்தை தமக்கை என்ற சொல் இன்னும் கூடிய அளவு வெளிப்படுத்துகிறது. அதுவுமன்றி அக்கா என்ற சொல்லை அப்பெண்ணினுடைய இனத்தவர் உபயோகிக்கலாமன்றி வேறொருவர் உபயோகிக்க முடியாது. தகப்பன், தமையன் என்ற சொற்களும் அவ்விதமே. இவ்வித்தியாசம் தம்பி, தங்கச்சி என்பவற்றில் எழுவதில்லை.

பார், காண், இவ்விரண்டு சொற்களையும் ஆராய்வோம். பால வாசகங்களில் பார் என்ற வினைச்சொல் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தைப் பார் - look at this picture - வருத்தக்காரனைப் பார் என்பன. இங்கு பார் என்ற சொல் ஒரு ஆளையோ அல்லது பொருளையோ பார் என்று மட்டும் குறிக்கிறது. பிந்தியதில் பாதுகார் காத்துக்கொள் எனப் பொருள்படுகிறது. மேலும் "பார்ப்பைப் பார்க்கும் பறவையிற் பார்க்கின்றான்" என்பதையும் நோக்குவாம். சாதாரணமாக "பார்" என்பது ஒரு தருணத்தை எதிர்பார்ப்பதைக் குறிக்கிறது. இப்பொழுது அப்பிரதானத்தை ஏறக்குறைய இழந்துவிட்டது. நான் அவரைத் தெருவில் கண்டேன். இங்கு காண் என்பது, ஆளைச் சந்திப்பதுடன் அவரோடு சம்பாஷிப்பதையும் குறிக்கிறது. தென்னிந்தியாவில் பார் என்ற சொல் பாகுபாடின்றி, பார், காண் என்னும் இரண்டிற்குமாகப் உபயோகிக்கப்படுகிறது. ஆனால் அது பார் (look) என்பதற்குமட்டுமே பொருத்தமானது. வெகுகாலத்திற்கு முன்பே தமிழிலிருந்து பிரிந்த பாஷையில் நோக்குக, காணுக, என்னும் இரண்டு வித்தியாசமானதும் தெளிவானதுமான பிரயோகத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். "கண்ணன் வரான் முத்தம் தரான்" இங்கு வா, தா என்ற வினையடிகள் எதிர் மறையைக் குறிக்கும்போது, இவற்றில் சிறுமாற்றம் செய்யவேண்டும். இவைகளை வாரான், தாரான் என்று எழுதல் வேண்டும். ஏனென்றால் இவைகளே அவற்றின் பழைய அமைப்பு. ஏனைய வினையடிகளில் நெட்டெழுத்துள்ளவை, உதாரணமாக சா, போ, கா என்பவை எதிர்மறையைக் குறிக்கும் போது, குற்றெழுத்தாக மாற்ற மடைவதில்லை. ஆகவே, வா, தா, என்பன அவற்றுக்குப் புறநடை. ஆதலின் கண்ணன் வாரான் முத்தம் தாரான் என்று எழுதுகிறோம்.

நீ வரமாட்டாயா ? ஓம் வரமாட்டேன். இவ்வித பிழைகள் தென்னிந்திய நாடகங்களிலும் சினிமா சம்பாஷணைகளிலும் இருக்கின்றன. இவ்வகை வினு குறிப்பது என்னவெனில், அதனை வினுவியவர் தம்மனதார விரும்பாவிடினும் ஓர் எதிர்மறை விடையையே எதிர்பார்க்கிருர். ஆனுல் அவர் சினேகிதன் அவருடைய வேண்டுகோளை மறுத்து 'ஆம்', என்கிருர். 'இல்லை' என்பதே சரியான பிரயோகம். விடுத்த வினுவின் தன்மையைக் கவனிக்காது தன்னுடைய விருப்பத்திற்கேற்ப ஆம் அல்லது இல்லை என்றே சொல்லவேண்டும். இதே பிழை ஆங்கிலத்திலும் விடப்படுகிறது. சிலவேளை, இந்தியாவின் சில பகுதிகளில், அது ஒரு தமிழ்ப் பாஷை நடையாக இருக்கலாம்.

இதனைப் படித்துப் பார். நீ வாசித்துப்பார். படி, வாசி எனும் இரு வினைச் சொற்களும் சிறிது வித்தியாசமான பொருளைக் கொண்டிருக்கின்றன. படி - study or learn well. வாசி - simply read or glance through. பத்திரிகை படித்தல், உபகதை படித்தல் இவைகளில் படித்தல் என்பதன் பிரயோகம் பிழையானது. ஏனெனில் அவற்றுக்கு அதிக கவனம் வேண்டியதில்லை. பிரயத்தனமும் வேண்டாம். அவற்றைப் பார்ப்பதில் சக்தியிழந்து போவதுமில்லை. இவற்றில் வாசி என்பதுதான் சரியானது. ஆனுல் தென்னிந்தியாவில் படி, வாசி என்ற இரு பதங்களும் வித்தியாசமின்றி உபயோகிக்கப்படுகின்றன. (யாழ்ப்பாணத்தில் இந்த வித்தியாசம் பாராட்டப்படுகிறது.) அவன் ஆறும் வகுப்பில் வாசிக்கிருன். (He is reading in the sixth standard.) என்றமாதிரி வாக்கியங்களும் உண்டு. இஃது ஆங்கில வாக்கியத்தின் நேர் மொழிப்பெயர்ப்பாகும். மாணவன் தனது புத்தகத்தைக் கவனமாகப் படிக்கிருன். சும்மா வாசிப்பதில்லை. ஆகவே, வாசி என்றதற்குப் பதிலாக படி என்பதை உபயோகிக்க வேண்டும். இவ்வகையான சமஸ்கிருத மூலச்சொற்கள் உண்மையான பிரயோகத்திலிருந்து பிறழ்ந்துவிட்டன. ஆனுல் அந்த வேறுபாட்டைப் பாராட்டுவது நல்லது. (உசிதமானது)

இக்கால வசனநடை நூல்களில் எடுத்தாளப்பட்டிருக்கும் வாக்கியங்களில், சில சமயம் ஏற்ற வினைச்சொற்கள் வேண்டப்படுகின்றன. உ—ம் கல்லால் அடித்தான். சூரியன் முளைத்தது (சிந்தாமணி) தண்ணீர் சாப்பிடு, இவை போல்வன. அடி என்னும் பதம் ஒரு தடியின் செயல் சம்பந்தமாகவே உபயோகிக்கப்படுகிறது. முளை என்பது

வித்துக்களின் துளிர் சம்பந்தமாக உபயோகிக்கப்படுகிறது. சாப்பிடு என்பது கெட்டியான உணவு சம்பந்தமாக உபயோகிக்கப்படுகிறது. எனவே மேலே காட்டிய வாக்கியங்கள் பிழையாகும். ஆதலின் கல் லால் எறிந்தான். சூரியன் உதித்தது. தண்ணீர் குடி என்று அவற்றை எழுதல் வேண்டும்.

பிஞ்சு, பூ, கறி காய், கொடி செடி, இச் சொற்கூட்டங்கள் ஒரு குறித்த முறையைப் பின்பற்றி ஒழுங்கு பண்ணப்பட்டிருக்கின்றன. அவைகளுடைய பிரயோகத்தில், இந்த ஒழுங்குமுறை மாற்றப்பட லாகாது. ஒரு சில எழுத்தாளர் இந்த ஒழுங்கு முறையைப் புறக்கணிக் கிறுர்கள். அச் சொற்கூட்டங்களை பூ, பிஞ்சு, காய் கறி, செடி, கொடி என்று சரியான முறைப்படி எழுதல்வேண்டும். அவைகள் சரியாக ஒழுங்குபண்ணப் ட்டால் அவற்றின் ஓசை காதுக்கு இனிமையையும் கொடுக்கிறது.

ஆங்கில பாஷை நடையையும் எழுதும் விதத்தையும் பின்பற்றிய பிறகு தமிழ்ப் பாஷை நடைபோல் தொனிக்காத வாக்கியங்களை எழுதப் பழகிவிட்டோம். உதாரணம்: எனக்குத் தனிப்பட்ட ஒருவர்மீதும் ஆத்திரமில்லை. (I bear no grudge against any individual.) "தனிப்பட்ட" என்ற சொல் அன்னிய பாஷை நடையைக் காட்டுகிறது. சாதாரண தமிழ் நடையில் எனக்கு ஒருவர் மீதும் ஆத்திரம் இல்லை என்று எழுதலாம். அதுபோலவே "இது பட்டினம் என்று அழைக்கப்படுகிறது" வன்ற வாக்கியத்தில் ஆங்கிலபாஷை நடையைப் பின்பற்றி அழைத்தல் என்னும் பதம் வந்திருக்கிறது. (This is called a seaport town). இது பட்டினம் எனப்படும் என்று எழுதினுல் போதுமானது.

அது நடக்கத்தான நடக்கிறது. இவன் செய்யத்தான் செய் வான். இவ்வித வாக்கியங்கள் தென்னிந்திய பிரபல எழுத்தாளர் களால் உபயோகிக்கப்படுகின்றன முதலாம் வாக்கியத்தில் இரண்டாவ தாக வந்திருக்கும் நட என்னும் பதம் செய் என்னும் பொருளில், முதலாவதாய் வந்துள்ள நட என்னும் வினையின் தொழிலை அழுத்திக் கூறுகிறது. ஒரே வாக்கியத்தில், ஒரே வினைச்சொல் இரண்டு முறை வருவது பிழை யெனக் கூறலாம். சொல்லின் பெருக்கத்தைக் குறைத்து, அது நடந்தே தீரும், இவன் கட்டாயம் செய்வான் என்று எழுதுவது நல்லது.

அ. வி. மயில்வாகனம்.

(தொடரும்)

# பாடசாலைக் கல்வியும் ஆசிரியர் தொண்டும்.

இல் வாழ்க்கையின் பயனெனை இலங்கும் இளஞ்சிறுர் நிற்க நடக்கப் பேசப் பழகிப் பக்குவமுடையரான காலத்திற் பாடசாலைக்கு வைக்கப் படுகின்றனர். அவர்கள் 'எழுத்தறிவித்தவன் இறைவனுவன்' என்னும் முதுமொழிப்படி ஆசிரியனைத் தெய்வமென மதிக்கின்றனர். எனவே ஆசிரியத் தொழில், பெருந்தன்மையும் பெருந்தொண்டும் நிரம்பினதாக மதிக்கப்படுகின்றது.

இச் சீரிய தொண்டு செய்யும் ஆசிரியன், நல்லொழுக்கம் தன்னம்பிக்கை ஒத்துழைத்தல் என்னும் மூன்று இன்றியமையாத அம்சங்களிலும் சிறந்தவனுக இருத்தலவசியம். இன்று நாம் நல்லாசிரியரெனக் கொண்டாடும் ஒவ்வொருவரிலும் குறிப்பிட்ட மூன்று அம்சங்களும் சிறந்திருத்தல் கண்கூடு. இத்தகை ஆசிரியனே, ஆசிரியத் தொண்டைச் செவ்வனே செய்து கல்வியின் நோக்கத்தை நிறைவேற்றுபவனுவன். மற்றையோர் எல்லாம் கல்வியின் நோக்கத்தைச் சிதைத்துச் சிறுரது சீவியத்தைக் கெடுத்துவிடுபவராவர்.

பிள்ளைகள் தமது பிற்கால சீவியத்தைப் பூரணமாக நடத்த ஆயத்தஞ் செய்து விடுதலே பாடசாலைக் கல்வியின் நோக்கமாகும். அதற்குச் சிறந்த முறையில் உதவிபுரிந்து விடுதலே ஆசிரியர் தொண்டாகும். பூரணசீவியத்தை நடத்த ஆயத்தஞ் செய்தலை ஐந்து பெரும் பிரிவுகளில் அடக்கிக் கூறலாம். அவையாவன : (i) உடல் வளர்ச்சி (ii) உள வளர்ச்சி (iii) ஆத்ம வளர்ச்சி (iv) இரசஞான வளர்ச்சி (v) செயற்றிறன் வளர்ச்சி என்பனவைகளாகும்.

மேற்குறித்த ஐவகை வளர்ச்சியும் ஆசிரியர் பாடசாலையிற் பயிற்ற வேண்டும். ஒவ்வொரு வகையான வளர்ச்சிக்குமுரிய பலவகையான பாடங்களைப் பயிற்றி வரவேண்டும். முதலாவது உடல் வளர்ச்சியை எடுத்துக்கொள்வோம். 'சுவர் இருந்தாலன்றோ சித்திரம்

எழுதலாம்' என்றுங்கு உடல் நன்ருக இருந்தாலன்றி மற்றைய வளர்ச்சிகள் கைகூடா. இதுபற்றியே 'நல்ல உடம்பில் நல்ல ஆத்மா இருக்கும்' என்னும் முதுரையும் உதித்தது போலும். ஆதலால் உடல் வளர்ச்சியைப் பாடசாலையில் விருத்தியடையச் செய்தலவசியம். இத்தேகாப்பியாசம் விளையாட்டு என்னும் பாடங்கள் கொடுக்கக் கூடியனவாகும்.

இற்றைக்குச் சில வருஷங்களுக்கு முன், பாடசாலைக் கல்வியின் நோக்கம், உளவளர்ச்சியை விருத்தியாக்குவதாகக் கருதப்பட்டுவந்தது. அதனுற் பாடசாலை நேரத்தில் பெரும்பாகம், உளவளர்ச்சிக்குரிய பாடங்களைக் கற்பிப்பதிலேயே செலவழிக்கப்பட்டது. இதனுற் பாடசாலை நேரத்தின் அதிக நேரம் உளவளர்ச்சிக்குரிய பாடங்களைக் கற்பிக்க உபயோகிக்கப்பட்டது. ஆனுல் கல்வியின் நோக்கம் உளவளர்ச்சி மாத்திரமன்று எனக் கொள்ளும் இக்காலத்தில், இப்பாடங்கள், பாடசாலை நேரத்தில், அரைப்பங்கிலும் குறையாகவே இடம்பெறுகின்றன. இதற்குரிய பாடங்களாவன எண், எழுத்து, வாசிப்பு (3 R. S.) நா. சீ. சாஸ்திரம், பூமிசாஸ்திரம், சரித்திரம், குடியியல் என்பனவும் இவைபோன்ற பிற்பாடங்களுமாகும்.

இனி, ஆன்ம வளர்ச்சியும் முக்கியமானதொன்ருகும். ஆன்ம வளர்ச்சியை விருத்தியடையச் செய்தலும், பாடசாலைக் கல்வியின் நோக்கங்களுள் ஒன்ருகும். முற்காலத்தில் ஆன்ம வளர்ச்சியைப்பற்றி அதிகம் பேசுவதில்லை. ஏனெனில் அவை பேசப்படும்பொழுது, ஒவ்வோர் மதத்தையும் சார்ந்து இருந்ததால் ஒரு சாரார் இன்னெரு சாராரிலே பகைமைகொள்ளக்கூடியவராக இருந்தனர். அதனுல் இது முக்கிய இடம்பெருது தவிர்க்கப்பட்டுவந்தது ஆனுல் இக்காலத்தில் இது மிகுதியும் வற்புறுத்தப்பட்டு வருகின்றது. இதனுல் மதவேதங்களும் போதனைகளும், ஒழுக்க சம்பந்தமான விஷயங்களும் கற்பிக்கப்படவேண்டியனவாகின்றன.

ஒருவனுடைய வாழ்க்கையைச் சந்தோஷமாக நடத்தத் துணை புரிவதில் இரசஞானமுமொன்ருகும். ஆதலால் இதுவும் பாடசாலையிற் கற்பிக்கப்படவேண்டிய தொன்ருகும். இது பழக்கத்தினுலே விருத்தியடைந்து வருகின்றது. 'சித்திரமும் கைப்பழக்கம் செந்த

மிழும் நாப்பழக்கம்' என்பது ஔவை வாக்கியமன்றோ! இதை விருத்தியடையச் செய்பவை இலக்கியம், சங்கீதம், நடனம், சித்திரம் என்னும் பாடங்களாகும்.

எப்படிப்பட்டவர்களுக்கும், தம்முடைய சீவியத்தை நடத்த ஏதாவதொரு துறையிலே தேர்ச்சி யிருக்க வேண்டும். இல்லையேல் வாழ்க்கையை நடத்தலே கஷ்டமாகிவிடும். இதனாலன்றோ கள்வரும் காடையரும் மிகுந்து வருகின்றனர். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையப்போவதில்லை. ஆதலின் இளமைப் பருவத்திலேயே, செயற்றிறனும் பழகிவரவேண்டிய தொன்றாகும். இற்றைக்குச் சில காலங்களின்முன் இப்படிப்பட்ட பயிற்சிகள் பாடசாலையில் இடம்பெறாதிருந்தன. ஆனால், இக்காலத்தில் இவைகளும் பெரிதும் கவனிக்கப்பட்டுவருகின்றன. இதற்குரிய பாடங்களாவன: பெண்களுக்கு வீட்டுப்பணி, தையல், கைப்பணி, நோயாளரைப் பராமரித்தல் என்பனவும், ஆண்களுக்குத் தோட்டப்பணி, கயிறு திரித்தல், புடைவை நெய்தல், பிரதம சிகிச்சை முதலியனவும் இன்னும் இவைபோன்றனவுமாகும்.

இதுவரை கூறியவற்றால் பாடசாலைக் கல்வியின் நோக்கமும் ஐவகை வளர்ச்சியும் அவைகளுக்குரிய பாடங்கள் எவை என்பதும் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சிறந்த முறையிற் கற்பிப்பது ஆசிரியர் ஒவ்வொருவரதும் கடமையாகும். இவற்றைக் கடைப்பிடித்து ஆசிரியர் யாவரும் நடப்பார் என்பது எமது அபிப்பிராயமாகும்.

V. துரைசிங்கம்.